கின்றன. விலைவாசி ஏற்றத்தைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரக் கூடாது என்பதைக் குறித்து அளிக்கப்பட்டிருக்கிற தீர்ப்புகளின் முழு விவரங்களையும் இங்கே படித்து, இந்தப் பேரவையின் விலைமதிக்க முடியாத நேரத்தைச் செலவழிக்காமல், இன்ன இன்ன நாட்களில் அத்தகைய தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மட்டும் இங்கே நான் குறிப்பிட்டுவிட்டால், மாண்புமிகு உறுப்பினர்கள் தேதிகளைக் குறித்து வைத்துக் கொண்டு, பிறகு படித்துக் கொள்ளலாம் என்று நான் கருதுகின்றேன்.

27—11—1952 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்களும், 25—9—1958, 20—4—1959, 31—8—1959 ஆகிய நாட்களில் மாண்புமிகு டாக்டர் யு. கிருஷ்ணராவ் அவர்களும், 23—3—1961, 27—3—1961 ஆகிய நாட்களில் மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் திரு. பக்தவத்சல நாயுடு அவர்களும், 27—2—1964, 17—7—1964, 8—3—1966, 5—11—1966 ஆகிய நாட்களில் மாண்புமிகு திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்களும் அத்தகைய தீர்ப்புகளை வழங்கியிருக்கிறார்கள்.

இப்படிப் பத்து தீர்ப்புகள் வழங்கியிருக்கிறார்கள். 8—3—1966 அன்றைய திரு. செல்லபாண்டியன் அவர்களுடைய தீர்ப்பு, இப்போதைய மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் அன்று கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுத்து வழங்கப்பட்ட தீர்ப்பாகும். ஆக, பெருமை மிக்க, ஆற்றல் மிகுந்த, நடுவுநிலைமை என்ன என்பதற்கே இலக்கணம் வகுத்தவர்கள் என்று மதிக்கத்தக்க அத்தகைய பெரியவர்கள்—முன்னாள் பேரவைத் தலைவர்கள்—அளித்துள்ள தீர்ப்புகளுக்கு மாறாக, வேறு விதமாக, இப்போதைய அவைத் தலைவராகிய தீர்ப்பு சொல்லக்கூடாது, சொல்ல முடியாது.

ஆக, விலைவாசி உயர்வைக் குறித்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மீது முன்னாள் பேரவைத்தலைவர்கள், சென்ற பதினைந்து ஆண்டுக் காலமாக தொடர்ந்து அளித்துள்ள தீர்ப்புகளை நான் இப்பொழுது மாற்றவேண்டும் என்று, குறிப்பாக, என்னுடைய இடது புறமாக இருக்கும் உறுப்பினர்கள் கருதுகிறார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். மாற்ற முடியாத நிலைமை இருப்பதைப்பற்றி வருந்துகிறேன்.

உணவுப் பொருட்கள் விலைவாசியைப்பற்றி கொடுக்கப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

5. அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் திரு. து. ப. அழகமுத்து, திரு. பி. ஜி. கருத்திருமன், திரு. கே. விநாயகம், திரு. பி. கே. மூக்கையா தேவர், திரு. என். சங்கரய்யா, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. ஏ. ஆர். மாரிமுத்து,

டாக்டர் ஹபிபுல்லாபெய்க், திரு. க. ர. நல்லசிவம் திரு. ம. பொ. சி; சிவஞானம் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களையும் இன்று 11 மணி அளவிற்கு என் அறைக்கு வருகை தந்து அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தை அருள் கூர்ந்து நடத்தித் தரும்படி நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

6. அரசினர் தீர்மானம்.

தொழில்கள் வாரியத்திற்கு (Board of Industries) தேர்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்தலைவர் அவர்களே, "தொழில்கள் வாரியத்தில் தமிழகச் சட்டப் பேரவைக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதன்பொருட்டு, 1922-ஆம் ஆண்டு தொழில்களுக்கு அரசாங்க உதவி அளிப்பது குறித்த சட்டத்தின் (தமிழகச் சட்டம் 5/1923) 3(1) (b) பிரிவை ஒட்டியும், 1956-ஆம் ஆண்டு தமிழக சிறு ரகத் தொழில், குடிசைத் தொழில், கடன் உதவித் தொகை அளிப்பது பற்றிய விதிகளைச் சேர்ந்த XXII (2) விதியையொட்டியும், இப்பேரவை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நிச்சயிக்கக்கூடிய தேதியன்று, இச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தொழில்கள் வாரியத்திற்கு இரு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதாக"

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி:

(இ) தொழில்கள் வாரியத்திற்கு (Board of Industries) தேர்தல்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாசாரப் பிரதிநிதித்துவக் கொள்கைக்கு இணங்கவும் தேர்தல் தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதி முறைகளின்கீழ் தொழில்கள் வாரியத்திற்கு (Board of Industries) தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வேட்பாளர் நியமனப் பத்திரங்களை 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிட மிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27-ஆம் தேதி, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.